பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 323

பொது நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 07
12 மார்ச்சு, 1986.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 305

மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 3ஆம், 4ஆம் பிரிவுகள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளன:

3. நிலையப்படி.

தாபனக்கோவையின் அத்தியாயம் I/111 இன் உபபிரிவு 12:1இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தருக்கு வழங்கப்பெறும் நிலையப்படி அவரின் புதிய திரட்டிய மாதாந்த வேதனத்தின் 10% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

4. 01.08.1985 ஆம் திகதி தொடக்கமான இடைநேர் செலவுகள்

தாபனக்கோவையின் அத்தியாயம் XIV இன் உப-பிரிவு 16:2 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு அல்லது கூட்டுத்தாபனப் பணியாளர் ஒருவருக்கு வழங்கத்தகும் இடைநேர் செலவினங்கள் பின்வருமாறு:

| | ரூபா. சதம் |
|---|---|
| 1 மைலுக்கு கூடிய தூரம் | 10.00 |
| 1 மைலுக்கு குறைந்த தூரம் | 5.00 |

ஒப்பம்: டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.